## பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுத் தொகுதியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் மீதி ரூபா 20,832,082,627 தொகையானதுடன் இதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 6,851,305 தொகையான இனங்காணப்படாத மீதி இனங்காணப்பட்டு உரிய கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான ரூபா 8,000,000 தொகையான செயற்பாடற்ற அங்கத்துவ ஒதுக்கக் கணக்கின் மீதியில் இருந்து ஆண்டின் போது முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 05

மில்லியன் தொகை ஒதுக்கம் எனும் பெயரில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(இ) நிலுவையாகவுள்ள வாழ்க்கைச் செலவுப் படிப்பணத்தைத் தீர்ப்பதற்காக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 500 மில்லியன் தொகையில் ரூபா 270.4 மில்லியன் தொகைக்குரிய நிலுவையான வாழ்க்கைச் செலவினப் படிப்பணம் கணிக்கப்பட்டு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்துவக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது செலுத்தப்பட வேண்டிய கணக்காகக் கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 20,732,055 தொகையான செலுத்த வேண்டிய சேமலாப நிதிய (Refunds Payable) மீதியானது சேவை பூர்த்தியாகியிருந்த போதிலும் அங்கத்துவ நிதிக்காக உரிமை கோரப்படாத மீதிகளின் கூட்டுத்தொகையால் உருவாகியிருந்தது. இம் மீதிகளுக்காக வரையப்பட்ட காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 19,437,750 தொகை 01 முதல் 11 வருடங்கள் வரை காலாவதியாகிய காசோலைகளின் பெறுமதி தொடர்பாக பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 93 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பெறப்படும் வட்டி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக அங்கத்துவக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 41,600 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதியின் காலப்பகுப்பாய்வு 03 முதல் 09 ஆண்டுகள் வரை பரந்து காணப்பட்டது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கியொழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2011 மார்ச் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் | 2011 மார்ச் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கல்விசார் படிகள் மொத்த உழைப்புகள் என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கி 2013 சனவரி 08 ஆம் திகதிய 1000 ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. மேற்குறித்த சுற்றறிக்கை வழங்கப்படுவதற்கு முன்னர் கல்விசார் படிகள் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் சேமலாப நிதியத்திற்கு மேலதிகமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 217.49 மில்லியன் தொகையான பங்களிப்பைத் தீர்ப்பதற்கோ அல்லது முறையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 91 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டின் போது ஊழியர் சேமலாப நிதியத்தின் முறையே ரூபா 1,610,934,308 தொகையும் ரூபா 1,625,642,752 தொகையுமான வருமானமும் செலவினமும் கணக்கிடப்பட்டிருந்த போதிலும் நிதியத்தை முறைப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவத்திற்காக ஆணைக்குழுவால் விதிக்கோவைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பல்கலைக்கழக மானியங்கள் | ஏதேனுமொரு மாதத்திற்குரிய சேமலாப பங்களிப்புப் பணம் அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் |

| | |
|---|---|
| ஆணைக்குழுவின் 2001 பெப்ரவரி 02 ஆம் திகதிய 3/2001 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | அல்லது அந்நாளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தாலும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களாலும் மாதத்திற்கான சகல காசோலைகளும் குறித்த தினத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவா எனவும் அக் காசோலைகள் தாமதமின்றி வங்கியிலிடப்பட்டதா எனவும் இனங்காணப்படுவதற்காக முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை என்பது கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் பகிரக்கூடிய தேறிய வருமானம் ரூபா 2,022,174,457 ஆகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பகிரக்கூடிய தேறிய வருமானம் ரூபா 1,366,400,312 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 655,774,145 தொகையான முன்னேற்றத்திற்கு முதலீட்டு வருமானம் ரூபா 190,390,600 தொகையால் அதிகரித்தமையும் வட்டி வீதம் சமப்படுத்தல் ஒதுக்கக் கணக்கு (Interest rate Equalization Reserve) மற்றும் செயற்பாடற்ற அங்கத்துவ ஒதுக்கக் கணக்கிலிருந்து முறையே ரூபா 281,650,220 தொகையும் ரூபா 5,000,000 தொகையும் மீண்டும் வருமானத்திற்கு எடுப்பட்டமையும் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் செலவினமாக வட்டி, கணக்காய்வுக் கட்டணங்கள், வங்கிக் கட்டணங்கள் மற்றும் காகிதாதிகள் மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்ததுடன்

ஏனைய நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் சேமலாப நிதியத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயற்பாட்டுத்திட்டம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த நிதியமாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுத்திட்டத்தில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளன. 2011/ 2012 செயற்பாட்டுத்திட்டத்தின் படி மருத்துவக் காப்புறுதி முறையொன்றை உருவாக்கி செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) அங்கத்துவ நிதியப் பெறுவனவு மற்றும் விடுவிப்பு

(ஆ) காசு மற்றும் வங்கி